கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00
மலர்-06 பெப்ரவரி-2013 இதழ்-63

## குறளமுதம்-63

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-6 அறத்துப்பால் மக்கட்பேறு**

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்

தம் மக்களைத் தம் செல்வமென்று பாராட்டுவர் பெற்றோர். அம்மக்களின் மகச்செல்வம் அவரவர் வினைக்கு ஏற்றவாறு வரும்.

### பருத்தித்துறை பனை தென்னை வள அ.கூ.சங்கத்தில்

# 40வது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த கௌரவிப்பு விழாவும்


பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய வருடாந்த கௌரவிப்பு விழாவும் 40வது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த 7ம் திகதி சங்கத்தின் தலைவர் திரு சி.சிவகுமார் அவர்கள் தலைமையில் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக சமாசத் தலைவர் திரு நா.கணேசன், மக்கள் வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு பி.கிருஸ்ணானந்தன், பருத்தித்துறை கிளை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு ந.பகீரதன், புலோலி வடக்கு கிராமசேவை அலுவலர் திருமதி தி.சாருமதி, கூ.அ.அலுவலர் திரு தி.பிரதீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் தொழிலிலிருந்து இளைப்பாறிய 60 வயதைப் பூர்த்திசெய்த திரு.கி.தர்மலிங்கம், திரு சி.சித்திரவடிவேல், திரு க.இராசரத்தினம், திரு மா.தெய்வேந்திரம், திரு செ.நவநீதராசா, திரு த.நவரத்தினம், திரு மா.விக்கினேஸ்வரன் ஆகிய 7 அங்கத்தவர்களையும், 2012ம் ஆண்டுக்கான சிறந்த அங்கத்தவர்களாக திரு ஆ.மகேஸ்வரன், திரு வை.நாகேஸ்வரன், [7ம் பக்கம் பார்க்க]

## வெல்லத் தொழிற்சாலை உற்பத்திச் செயற்பாடு விரைவில் தொடங்கும்!



பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 2 கோடியே 22 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை மிக விரைவில் தொழிற்படவுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு க.குணரத்தினம் தெரிவித்தார்.

மேற்படி தொழிற்சாலையினை ஆரம்பிக்கும் முகமாக கடந்த 12ம் திக்தி புதிய கட்டடத்துக்கான பால் காய்ச்சுதல் நிகழ்வு சங்கத் தலைவர் திரு தி.இந்திரசித்து தலைமையில் நடைபெற்றது.

இத்தொழிற்சாலையானது யூ.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டது. இச்சங்க அங்கத்தவர்களின் நன்மை கருதியும் அங்கத்தவர் சமூகம் சார்ந்த பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட [7ம் பக்கம் பார்க்க]

### முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி

சமாசத்தின் கோரிக்கைக்கு அமைவாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாவட்ட மட்டப் பயிற்சியினை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. [5ம் பக்கம் பார்க்க]

### மாதாந்த மாநாட்டில் தீர்மானம்

கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மாதாந்த மாநாட்டில் தொழில்திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி எம்.ஜெகதீஸ்வரன் அவர்கள் சமுகம் கொடுத்து கருத்துரை வழங்கினார். [5ம் பக்கம் பார்க்க]

### கலந்துரையாடல் நிகழ்வு

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய கூ.சங்கம், சமாசம் ஆகியவற்றின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கணக்காளர்கள் ஆகியோருடன் கணக்கு வைப்பு முறை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று [5ம் பக்கம் பார்க்க]

**"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"**

**சிந்தனைத்துளி**

"தூய்மை, பொறுமை, விடாமுயற்சி, உழைப்பு, நேர்மை என்பன எதிலும் வெற்றிபெறச் செய்யும் பெரிய ஆயுதங்கள்" -அறிஞர்-

# கற்பகக்கரு

## நிறுவன வெற்றியில் திட்டமிடல்...

உலகில் செயற்படுகின்ற எந்தவொரு நிறுவனமும் தமது இலக்கினை அடைய வேண்டுமானால் திட்டமிட்ட செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது.

திட்டமிட்டு செயற்படாதுவிட்டால் அந்நிறுவனத்தின் எதிர்காலம் முன்நோக்கியதாக அமையாது பின்னடைவையே ஏற்படுத்தும்.

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது செயற்பட்டு வரும் பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் தமது வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அவ்வளத்தினை நம்பி வாழும் பனந்தொழில் வல்லுனர்களை சமூக, பொருளாதார மேம்பாடடையச் செய்வதே இத்திட்டமிடலின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

இக்குறிக்கோளை எய்துவதற்கு அங்கத்தவர்கள், பணிப்பாளர் சபையினர், சங்க முகாமை, மற்றும் பணியாளர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமே.

கடின உழைப்பின்மூலம் கிடைக்கின்ற உற்பத்தியினை சரியான முறையில் பயன்படுத்தி, உச்சப் பயன்பாட்டினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பொறுப்பு மேற்கூறப்பட்டவர்களையே சார்ந்ததாகும்.

இதற்கு இந்நிறுவனம் சார்ந்தவர்கள் வருடாந்தம் தயாரிக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் உற்பத்தி ஊக்குவித்தல் செயற்பாட்டுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுத்தல் முகாமையின் கட்டாய பணியாகும்.

ஒரு உறுப்பினர் கூட்டுறவில் இணைவதன் மூலம் தமது அனைத்துத் தேவைகளும் பூர்த்திசெய்யப்படும் என்ற எண்ணத்துடனே இணைகின்றார். அவ் அங்கத்தவர்களினது எதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இந்நிறுவனங்களை வழிநடத்துகின்றவர்களது தலையாய கடமையாகும்.

வளங்களில் சிறந்த வளம் பனை வளம். 'பனம்பொருளே பரம்பொருள்' என எண்ணுகின்ற அங்கத்தவர்களைக் கொண்ட இவ்வகைச் சங்கங்கள் முறையான திட்டமிடலை மேற்கொண்டு அதனை சரியான வகையில் செயற்படுத்துவார்களேயானால் உரிய இலக்கை அடையமுடியும்.

திட்டமிடலுக்கு உரிய பகுதிக்கு பொறுப்பானவர்களின் ஆலோசனைகள் கட்டாயமாகப் பெறப்பட வேண்டும். அதாவது ஒரு நிறுவனத்தின் வருடாந்த செயற்திட்டத்தினை தயாரிக்கும்போது கடந்த வருட செயற்பாட்டில் ஏற்பட்ட சாதக, பாதகம் மற்றும் பின்னடைவுகள், அதற்கான காரணங்களைக் கண்டறிவதோடு, அதற்கான மாற்று நடவடிக்கையினை கவனத்தில் கொண்டு, உரிய பகுதிப் பொறுப்பாளர்களிடமிருந்து ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் பெற்று நடப்பாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சிறப்பானதாகத் தயாரிக்க வேண்டிய பொறுப்பு பணிப்பாளர்கள் மற்றும் பொதுமுகாமையாளரின் பணியே.

இந்த வகையில் சங்கங்களால் உருவாக்கப்பட்ட கொத்தணிகள் மற்றும் சமாசம் என்பவற்றின் திட்டமிடலானது சங்கங்களின் உயர்ச்சி கருதியதாகவே அமைய வேண்டும். அதாவது சங்கங்களின் வளங்களை முழுமையாக பயன்படுத்தத்தக்க ஆலோசனைகளையும் அவற்றுக்கான தளபாட உபகரணங்களையும் வழங்குவதோடு, பதப்படுத்தல், பாதுகாத்தல், சந்தைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் துறைசார்ந்தவர்களின் காத்திரமான ஆலோசனைகளைப் பெற்று தற்காலத்துக்கேற்ற வகையில் நவீனங்களை உட்புகுத்தி வெற்றிபெறக் கூடிய திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டுமென கற்பகம் கேட்டுக்கொள்கிறது.

*"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"*

ஆசிரியர்

# இலங்கையின் நீதிமன்ற அமைப்பு

## வரலாறு சார்ந்த அபிவிருத்தி 9

3. தரப்பினரின் உடன்பாடு இருக்குமானால் அல்லது சட்டத்தினால் நியமிக்கப்பட்டு இருக்கும் வேளையில் நீதிமன்றத்தில் விசாரணை செய்யும் வழக்கு நீதிமன்றத்தினாலேயே மத்தியஸ்த சபைக்கு அனுப்பப்படும்.

q 25,000 ரூபாவுக்கு குறைந்த சிவில் பிணக்குகள்

q 2மத்தியஸ்த சபைச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சிறு குற்றவியல் குற்றங்கள் தொடர்பான பிணக்குகள்.

இவ்வாறான பிணக்ககள் தொடர்பாக நீதிமன்றத்துக்கு போவதற்கு முன் கட்டாயமாக மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 8.3 மத்தியஸ்த சபைக்கு செல்வதன்மூலம் அடையும் நன்மைகள்

q நீதிமன்றத்தைப் போல அதிகமான செயல்முறைகளின்றி இலகுவாகவும் வசதியான விதிமுறைகளையும் பின்பற்றக்கூடியதாக இருத்தல்.

q ஒரு தரப்பின் தோல்வியில் முடிவுறும் விதிமுறைகளின்றி இரு தரப்பினர்களுக்கும் இடையேயான உடன்பாட்டில் முடிவுறும் நடைமுறைகள்.

q பிணக்குகளைத் தீர்ப்பதற்கு செலவாகும் பணமும் எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாகும்.

q மிகவும் விரைவாக மத்தியஸ்தத்துக்கு வருதல் அல்லது மத்தியஸ்தம் செய்யமுடியாதவிடத்து மத்தியஸ்த சபையின் சான்றிதழைப் பெற்று மாற்று விதிமுறைகளுக்கு வருவதற்கு முடியும். உ-ம்: நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல்.

q சரியான பயிற்சியைப் பெற்ற மத்தியஸ்தர்களை உள்ளடக்கிய சபையின் உதவியுடன் பிணக்குகளுக்கு தீர்வுகாண முடியும்.

அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்ற நடைமுறைகளுக்கு வெளியில் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் வெற்றிகரமான உபாய முறைகள் என மத்தியஸ்த சபையை அறிமுகம் செய்ய முடியும். மத்தியஸ்த சபைக்கு கொண்டுவரப்படும் பிணக்குகளில் 60 வீதமளவில் மத்தியஸ்தம் செய்யப்பட்டு முடிவடைகின்றன என ஆய்வுகளிலிருந்து வெளிக்கொணரப்பட்டுள்ளது. மனிதத் தொடர்புகளுக்கு ஊறுவிளைவிக்கக்கூடியதும், பணம் அதிகம் செலவாகும், நீண்ட நாட்களை எடுக்கும், சம்பிரதாயபூர்வ பிணக்குகளை தீர்ப்பதற்குதவும் உபாய முறைகளிலும் பார்க்க மத்தியஸ்தம் செய்தல் எல்லாவகையிலும் நன்மையளிக்கின்றது. ஆகவே முடிந்தவரையில் கூடியளவு மத்தியஸ்த சபைக்கு தங்களுடைய பிரச்சினைகளை கொண்டுசென்று திறந்த மனத்துடன் தங்கள் பிரச்சினைக்கு தீர்வு கண்டுகொள்வதனால் சமூகத்துக்கும் தனிப்பட்ட முறையிலும் நன்மையே கிடைக்கும்.

### காதி நீதிமன்றம்–QUASI COURT

இது 1951ம் ஆண்டின் 13ம் இலக்கம் கொண்ட முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றமாகும். இந்த நீதிமன்றத்தினால் முஸ்லிம் திருமணங்கள் தொடர்பான பிரச்சினைகள் மாத்திரம் அதாவது பராமரிப்பு மற்றும் விவாகரத்துக்கள் தொடர்பான நீதிமன்ற அதிகாரங்கள் செயற்படுத்தப்படுகின்றன. பிரதேச மட்டத்தில் செயற்படும் காதி நீதிமன்றத்தின் தீர்ப்புக்களில் திருப்தியடையாத தரப்பினர் கொழும்பில் அமைந்துள்ள காதிமார்களின் சபைக்கு மேன்முறையீடு சமர்ப்பித்துக்கொள்ளலாம்.

வழக்கறிஞர்களுக்கு காதி நீதிமன்றில் தோன்றி கட்சிக்காரருக்கு சார்பாக வாதாடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், முஸ்லிம் பக்தர்களுடைய திருமணம் சார்பான பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கான அமைக்கப்பட்ட விசேட தன்மை கொண்ட நிறுவனமாக காதி நீதிமன்றத்தை அறிமுகப்படுத்த முடியும்.

–முற்றும்–

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய நிலையும் எதிர்கால இலக்கும்

**90வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு சமாசம் நடத்திய பணியாளர்களுக்கான கட்டுரைப் போட்டியில் 2ம் இடம் பிடித்த மானிப்பாய் சங்கப் பணியாளரான து.கா.பபியோலாவின் கட்டுரை பிரசுரமாகிறது**

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு முக்கியமான இடத்தினை வகிக்கின்றன. ஏனெனில் இதனை முதன் முதலில் ஆரம்பித்தவர் எம்.என். பேரேரா ஆவார். இவர் சீவல் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரும்பாடு பட்டவர். இன்று சீவல் தொழிலாளர்களின் தலைவிதியை தாமே நிர்ணயிக்கக்கூடிய முறையில் இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பனை வளம் என்பது ஒரு பூர்வீகத்தின் சின்னமாகும். இது எமது மண்ணின் சொத்து மட்டுமல்ல. ஒரு சுய பொருளாதாரத்தின் அடையாளமாகவும் காணப்படுகிறது. இந்தப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்கள், பணியாளர்கள் என இருவர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததே, அது போலவே இவர்களும் முக்கியமானவர்களாக காணப்படுகின்றனர்.

கடந்தகால போர்ச் சூழலால் எமது பனை வளம் சிதைக்கப்பட்டது. எனவே இவற்றை மீள் மரநடுகைச் செயற்றிட்டத்தினை உருவாக்கி அதன்மூலம் பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. அத்தோடு சங்கங்களில் அங்கத்தவர், பணியாளர்களுக்கு பயிற்சி இல்லாத நிலைமை காணப்படுகிறது. இவர்களுக்குத் தகுந்த பயிற்சியளிப்பதன் மூலம் எதிர்கால இலக்குகளை நாம் அடைவதற்கு வாய்ப்பு உண்டு.

அத்தோடு, எமது சங்கங்களில் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது. காரணம் சாலைகளில் உற்பத்தி செய்யும் சாராயத்துக்கு அதிகளவு உற்பத்திச் செலவு ஏற்படுவதால் இதனை விற்கமுடியாத தளம்பல் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு, இத்தொழிலை செய்பவர்கள் அருகிப்போகின்ற தன்மை காணப்படுகின்றது. ஏனென்றால் இவர்கள் கல்வியிலும் வேறு தொழிலும் நாட்டம் செலுத்துகிறார்கள். இதைவிட இத்தொழில் செய்வது தமக்கு கௌரவக் குறைவு எனவும், அபாயகரமானது எனவும் நினைக்கிறார்கள். எனவே எமது சங்கங்களுக்கு இந்நிலைமை தொடருமாயின், எதிர்காலத்தில் இவற்றைப் பூட்ட வேண்டிய அபாய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மரம் ஏறும் இயந்திரத்தை கண்டுபிடிப்பதன்மூலம் எல்லோரும் இத்தொழிலை செய்யலாம் என்ற மனநிலையை எமது மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். அத்தோடு எமது சங்கத்தில் பெருமளவு நிதி, போத்தற்கள் உற்பத்திக்கும், பணங்கட்டி உற்பத்திக்கும் முடங்கிக் கிடக்கும் நிலைமை தோன்றுகின்றது. இதனால் இந்நிதியை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

மேலும் எமது சங்கங்கள் கிளைகளை கொட்டகைகளாகவே வைத்திருக்கின்றன. இதனை கவர்ச்சிகரமான முறையில் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், மது அருந்தச் செல்பவர்கள் இதனை தரக்குறைவாகவே (அலுவலர்கள்) நினைக்கிறார்கள். எனவே தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மதுவை விரும்பி அருந்துவார்கள். அதற்கேற்ற வகையில் எதிர்காலத்திலாவது நாம் வருமானத்தைத் தேடக்கூடிய வகையில் சங்க கிளைகளை மாற்றியமைக்க வேண்டும்.

அத்தோடு, இங்கு பணிபுரியும் கிளைமுகாமையாளர்கள் தமது கடமைகளை ஒழுங்காக செய்வது இல்லை. இவர்கள் பாவனையாளர்களை கவர்ச்சிகரமாக அணுகும் முறையை பின்பற்ற வேண்டும். அத்தோடு, கிளைகளை பார்வையிடுவதற்கு கிளை மேற்பார்வையாளரை அனுப்ப வேண்டும். அப்போதுதான் எமது சங்கங்கள் எதிர்காலத்தில் தனது இலக்கை அடைய வாய்ப்பு உண்டு.

மேலும் பனையில் இருந்து கள்ளையும், சாராயத்தையும் பெறாமல், நவீன யுக்திகளைப் பயன்படுத்தி பெட்டி, கடகம், தொப்பி, தட்டு, பாய் போன்வற்றை உற்பத்தி செய்தலும், இதேபோன்று தென்னையிலிருந்து கள், சாராயம், மட்டுமல்லாது ஓலையிலிருந்து கிடுகு, தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய், மட்டையிலிருந்து தும்பு போன்றவற்றை மின் உபகரணங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தலும், பனங்காயிலிருந்து பனாட்டு, பாணிப்பனாட்டு, ரொபி போன்றவற்றை உற்பத்தி செய்து நவீன முறையில் வழங்குவதன்மூலம் தமது எதிர்கால இலக்கை அடைந்து கொள்ளலாம்.

அத்தோடு, உள்ளூரில் உற்பத்திசெய்யப்படுகின்ற பொருட்களை நவீன முறையில் பொதியில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது இல்லை. இதனை ஏற்றுமதி செய்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்றுமதி வருமானத்தைப்பெற்று அங்கத்தவர்களது வருமானத்தையும், இதனை நம்பி வாழும் பணியாளரது வருமானத்தையும் அதிகரிக்கலாம்.

இன்னும் எமது சங்கங்கள் தென்னம்மட்டை, பொச்சு என்பவற்றில் உள்ள பதிலீட்டு பொருளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது இல்லை. இந்நடவடிக்கை தென் பகுதியில் நடைபெறுகிறது. இப் பதிலீட்டுப் பொருள் வெளிநாடுகளில் அப்பிள் தாவரம் வளர்க்கப் பயன்படுகிறது. இதனை நாம் வடபகுதி சங்கங்களிலும் செய்வோமானால் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கலாம்.

மேலும் எமது ஒருசில அங்கத்தவர்கள் தகுந்த முறையில் கள்ளினை கிளைகளுக்கு கொடுப்பது இல்லை. தம் வீடுகளில் விற்று பணத்தைப் பெறுகிறார்கள். எனவே இதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு எமது மதுசார வடிசாலை நிலையங்களை வேறு நிறுவனங்கள் பொறுப்பெடுக்க நேர்ந்தால் எமக்கு குறைந்த வருவாயே கிடைக்கலாம். அத்துடன் இச்சங்கங்கள் முகவராகத் தொழிற்படும் நிலைமை காணப்படும். இதனால் பல பேருக்கு வேலைவாய்ப்பு அற்றுப் போகும் நிலைமையும் காணப்படுகிறது.

இன்னும் எமது சங்கங்கள் கணினி முறையில் செயற்படுவதில்லை. இதனை நாம் கணினி முறைப்படுத்த வேண்டும். ஏனென்றால் கணக்கு வைப்பு முறைகளை இலகுவாக செய்யக்கூடிய வகையில் இலகுபடுத்தி, தற்போதைய நிலையில் இருந்து மாற்றம் பெற்று எதிர்காலத்தில் சிறந்த சங்கங்களாக திகழ வாய்ப்பு உள்ளது. (7ம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகளின் நிழல்கள்

## ★ பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ★













பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் அதன் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய 40வது ஆண்டு நிறைவு மற்றும் கௌரவிப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள், கௌரவிக் கப்பட்டோர் மற்றும் சங்கத்தின் பணியாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோரை படங்களில் காணலாம்.

# பேரீச்சம் பழம்



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் பழம் பேரீச்சம்பழம். பேரீச்சம்பழத்தில் ஏராளமான நன்மைகள் உள்ளன. இரும்புச் சத்து அதிகம் உள்ள பேரீச்சம்பழம், நோய் எதிர்ப்புச் சக்தி வாய்ந்தது. விற்றமின் மற்றும் மினரல் நிறைந்த இந்தப் பழம் நரம்புத் தளர்ச்சியை போக்கும். புரதச் சத்து, நார்ச்சத்து, கல்சியம் உள்ளிட்ட சத்துக்கள் நிரம்பியுள்ள பேரீச்சம்பழம் புற்றுநோய் வராமல் தடுக்கும்.

**கண்பார்வை தெளிவடைய.....**

விற்றமின் ஏ குறைவால்தான் கண்பார்வை மங்கலாகும். இதைக்குணப்படுத்த பேரீச்சம்பழமே சிறந்த மருந்தாகும். மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம்பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண்பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

**பெண்களுக்கு....**

பொதுவாக பெண்களுக்கு அதிக கல்சியச் சத்தும், இரும்புச் சத்தும் தேவை. மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் உதிரப்போக்கால் இத்தகைய சத்துக்கள் குறைகின்றன. இதை நிவர்த்தி செய்யவும், ஒழுங்காக மாத விலக்கை ஒழுங்குபடுத்தவும் பேரீச்சம்பழம் மருந்தாகிறது. மேனோபாஸ் அதாவது 45 வயது முதல் 52 வயதுவரை உள்ள காலகட்டத்தில் மாதவிலக்கு முழுமையடையும். அப்போது பெண்களின் எலும்புகள் பலவீனமாக இருக்கும். மேலும் கை, கால், மூட்டுகளில் வலி உண்டாகும். இதனை சரி செய்ய, பேரீச்சம் பழத்தை பாலில் கலந்து கொதிக்க வைத்து பாலையும், பழத்தையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் என்றும் ஆரோக்கியமாக இருக்கும்.

**ஆண்களுக்கு.........**

ஆண்களுக்கு ஆண்மைத் தன்மையை அதிகரிக்கத் தேனுடன் பேரிச்சம்பழம் பெரிதும் உதவுகிறது. புரவைக் குறைபாட்டைப் போக்கி பார்க்கும் திறனை அதிகரிக்கும். கெட்ட கொழுப்பை குறைக்கும் தன்மை உள்ளது. இனிப்புச் சுவையுள்ளதால் இந்தப் பழத்தை குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் நன்மை அளிக்கும் பேரீச்சம்பழத்தை தினமும் சாப்பிட்டு வந்தால் உடல்நலம் பெறும்.

## சங்கங்கள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் அலுவலக நாளாக ஒவ்வொரு திங்கட்கிழமையும்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது செயற்பாடுகள் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் அலுவலக நாளாக ஒவ்வொரு திங்கட்கிழமையும் அமையும் என கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

**மாதாந்த மாநாட்டில்...........** 1ம் பக்கத் தொடர்ச்சி

அவரின் கருத்துரையில், சங்கங்கள், கூட்டுறவுத் திணைக்களம். தொழில் திணைக்களம் என்பவற்றுக்கான தொடர்புகள் பற்றியும், இக்கடமைகளுடன் விசேடமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் தொடர்புபட்டுள்ளதாகவும் தொழில்திணைக்கள ஒழுங்குவிதி 67இல் கூட்டுறவு ஊழியர்களின் வேலைகள் மேலதிக நேர சம்பளம் விடுமுறைகள் தொடர்பான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், 1984ம் ஆண்டில் 125ம் இலக்க கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழு சுற்றுநிருபம் ஆகக்கூடிய நலன்கள் பணியாளர்களுக்கு கொண்டுசெல்லப்பட வேண்டுமெனவும், பிரசவ நலன் பற்றிய 1988ம் ஆண்டின் 43ம், 44ம் பிரிவு தொடர்பிலும், தனியார்துறை பங்குடமை, கம்பனிகள் என்பவற்றில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு கட்டாயமாக ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி செலுத்தல் வேண்டுமெனவும், இந்நிதி தற்காலிக, நிரந்தர, அமைய பணியாளர்கள் வேறுபாடின்றி செலுத்தி வருதல் வேண்டுமெனவும், இதனை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டுமெனவும், சட்டத்தில் உள்ளபடி பணியாளர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும், தொழிற்சட்டங்களை கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதுடன், அதனைப் பேணிப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட அவர், மேலும் தெரிவிக்கையில்,

சங்கங்களால் பணியாளர்களிடமிருந்து அறவிடப்படும் ஊழியர் சேமலாப நிதி உதவு தொகைகள் செலுத்துவதில் தாமதம் ஏற்படின் காலத்துக்கு ஏற்ப 5 வீதம், 10 வீதம், 15 வீதம், 50 வீதம் தண்டப்பணம் செலுத்துவேண்டி ஏற்படும். இதனை சங்கங்களின் பொறுப்பானவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். சங்கங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல்மூலம் தீர்வுகண்டுகொள்ளுதல் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

**முன்பள்ளி ஆசிரியர்...........** 1ம் பக்கத் தொடர்ச்சி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்ற முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் தற்கால கற்பித்தல் முறைக்கு அமைவாக சிறார்களுக்கு உடற்கல்வியை பயிற்றுவிப்பதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு இப்பயிற்சியினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியினை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உடற்கல்வித் துறை சார்ந்த விரிவுரையாளர்கள் வருகைதரவுள்ளனர்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் முன்பள்ளி ஆசிரியர்களின் பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி என்பவற்றை அனுப்பிவைக்குமாறு உரிய சங்கங்களை கூட்டுறவுச் சபை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

**கலந்துரையாடல் –** 1ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே. அருந்தவநாதன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 8ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், 2013ம் ஆண்டு இந்நிறுவனங்களின் கணக்கு வைப்பு முறைகள் தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டதோடு, மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரன் அவர்களால் மாதிரி கணக்குவைப்பு படிவம் வழங்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பான மீண்டுமொரு கலந்துரையாடலை மேற்படி பிரதிநிதிகளுடன் இம்மாதம் 15ம் திகதி மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

## மகளிர்குழு உறுப்பினர்களின் சுயதொழில் அபிவிருத்தியில்

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு!

90வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு சமாசம் நடத்திய மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம்பிடித்த செல்வி பா.மதனரூபி எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

"கணக்கிலா பயன்தரும் கற்பகதரு" பற்றி அனைவரும் அறிந்திருப்பீர்கள். அதன் வனப்பும் வடிவமும், அது கொண்டுள்ள சிறப்பும் அனைவரையும் கவர்ந்துள்ளது. இந்தக் கணக்கிலா பயன் தருகின்ற எமது பனைவளம் எமது கிராமத்தை, எமது சமூகத்தை, எமது பிரதேசத்தை, ஏன் எம்மையே இவ்வளவு தூரம் கட்டுரை எழுத வைத்துள்ளது என்றால் அதன் வரலாறு, அதன் வளர்ச்சி எவ்வளவு தூரம் வளர்ந்துள்ளது என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

இந்தப் பனை வளத்தினால் பொருள் வளம் காணவேண்டுமென்பதற்காக எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழவினருக்கென பற்பல உதவிகளை செய்து தாமும் வளர்ந்து எம்போன்ற சமூகத்தினரையும் வளர்த்து வந்துள்ளார்கள, வளர்த்து வருகிறார்கள், இனிமேலும் வளர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்படியாக எம் போன்ற சமூகத்தினரை வளர்த்துவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனமானது மகளிர்குழு உறுப்பினர்களுக்கும் செய்யும் சேவையோ அளப்பரியது.

"மாதராய் பிறப்பதற்கு மாதவம் செய்யதிட வேண்டுமம்மா..." எனப் பாடிய கவிஞர், உண்மையையே உணர்த்திப் பாடியுள்ளார். இம் மாதர்களுக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனமானது சுயதொழில் அபிவிருத்திக்கென கடன் உதவிகளை வழங்கி வருகின்றது. அக்கடன் தொகையைப் பெற்ற மகளிர்குழு உறுப்பினர்கள் தமக்குத் தெரிந்த ஏதோ ஒரு தொழிலைச் செய்து, தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்து வருகின்றார்கள்.

ஒருசிலர் அக்கடன் உதவியைப் பெற்று பனங்களியைச் சேர்த்து பனாட்டு, பாணிப் பனாட்டு என பலவகைப் பொருட்களைச் செய்து வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றார்கள். அதைவிட பனங்களியில் பனம் பானம்(சோடா) தயாரித்து அதனை புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் அங்கிருந்து இங்கு வந்து தமது விடுமுறைக் காலத்தைக் கழிக்கும்போது அதனை விரும்பி அருந்துகின்றார்கள்.

மேலும் ஒரு சிலர் கடனுதவியைப் பெற்று பனையோலையிலிருந்து அலங்காரப் பொருட்களைத் தயாரித்து, உதாரணமாக பாய், பெட்டி, சுளகு, கடகம், தொப்பி, கைப்பை, கூடை, தீந்துப் பெட்டி எனப் பலவற்றைத் தயாரித்து, அவ் ஓலைகளுக்கு அழகாகச் சாயமிட்டு அழகழகாகத் தயாரித்து விற்பனை செய்து அதன்மூலம் வருமானம் ஈட்டிக்கொள்கின்றார்கள். அதனைவிட, இப்படியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி உழைக்கப்படுகிறது.

இது தவிர, இக்கடன் உதவிகள்மூலம் மொத்தத்தில் புழுக்கொடியல், பனாட்டு, பனம்பானம், அலங்காரப் பொருட்கள், மட்டையிலிருந்து பெறப்பட்ட தும்புகள்மூலம் தயாரிக்கப்பட்ட தும்புத் தடிகள் என்பன ஏற்றுமதி செய்யப்பட்டு நமது சங்கமும் மகளிர்குழுவாகிய நாமும் அந்நியச் செலாவணியை உழைத்துக்கொள்கின்றோம்.

மேலும் இம்மகளிர் குழவினருக்கு சிகை அலங்காரப் பயிற்சி, மணப்பெண் அலங்காரப் பயிற்சி, கணினிப் பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சி எனப் பலதரப்பட்ட பயிற்சிகளை வழங்கி படித்த பெண்களை மட்டுமல்ல ஓரளவு படித்த பெண்களையும் படிப்பறிவு குறைந்த பாமர மக்களுக்கும் உதவிகளை வழங்கி கைதூக்கி விடுகின்றன நமது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள்.

அத்துடன் படித்த பெண்களாயின், அவர்களது தரத்துக்கு ஏற்ப அவர்களுக்கு தங்கள் சங்கத்திலோ அல்லது தமக்குத் தெரிந்த பரிச்சயப்பட்ட நிறுவனங்களிலோ கதைத்து அவர்களை இணைத்துவிடும் பணியையும் மேற்கொள்கின்றது.

அங்கத்தவர்களின் பிள்ளைகள் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன அப்பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைகளில் சித்தியடைந்தால் அம்மாணவனுக்கு அல்லது மாணவிக்கு அந்தந்தச் சங்கங்களினூடாக பாராட்டுவிழா ஏற்பாடு செய்து பாராட்டுக்களை வழங்கி ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றன.

மேலும் இச்சங்கமானது இம் மாணவர்கள் கல்வி கற்பதற்கு உந்து சக்தியாக வருடாவருடம் கல்வி உபகரணங்களை வழங்கி வருகின்றது. இதைவிட இம்மாணவர்கள் தமது கல்விக் காலத்தில் சில சுருக்கக் குறிப்புக்கள், படங்கள், என்பவற்றை பிரதிசெய்வதற்காக குறைந்த விலையில் பிரதியாக்கம் செய்து தருகிறார்கள். இம் மாணவர்கள் என்பதில் ஆண், பெண் இருபாலாரையும் குறிப்பிடலாம். எனவே நான் ஒரு பெண்ணாக இப் பனை தென்னை வள் அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனத்தினூடாக பெற்றுக்கொண்ட நன்மைகள் என்பதால் இதனைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் கற்பகம் என்ற பெயரில் இயங்கிவருகின்ற எம் சங்கத்தின் ஒரு பிரிவில் பனையோலையினால் செய்யப்பட்ட அத்தியாவசிய அலங்காரப் பொருட்கள் மகளிரிடமிருந்து மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்து விற்பனை செய்வதன்மூலம் மகளிரை வளர்த்து வருகின்றது.

இதனைவிட பனையோலையினால் தயாரிக்கப்படுகின்ற இவ் அத்தியாவசிய அலங்காரப் பொருட்களை தயாரிப்பதற்கு கிராமங்கள்தோறும் பயிற்சிகள் வழங்கி ஊக்குவித்துக் கொண்டு வருகின்றன எமது பனை தென்னை வள நிறுவனங்கள்.

மேலும் பனம்பாணி தயாரிப்பதற்கும் (7ம் பக்கம் பார்க்க)

## மகளிர்குழு உறுப்பினர்களின் சுயதொழில்...... பக்கத் தொடர்ச்சி

கல்லாக்காரம் தயாரிப்பதற்கும் கடன் உதவிகள் வழங்கி வருகின்றன. இதன்மூலம் ஒவ்வொரு வீட்டிலும் தாய், மகள், பேரப்பிள்ளை என எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட்டு போதிய வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றார்கள்.

மேலும் இந்தத் தடையற்ற போக்குவரத்தினால் புலம்பெயர்ந்தவர்கள், தென்னிலங்கை மக்கள் எனப் பலரும் இங்கு வருகை தருகின்றார்கள். அவர்களால் மிக மிக விரும்பப்படுகின்ற பொருள் இந்தப் பனை வளத்தினால் தயாரிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், உணவுப் பொருட்கள் எனப் பலவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்கின்றார்கள். இதன்மூலம் எமக்கு அந்நியச் செலாவணி வருவாயை உழைத்துக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இதனால் நம் ஒவ்வொருவரினதும் குடும்பமும் சிறப்பாகவும் சந்தோசமாகவும் திருப்திகரமாகவும் தம் வாழ்க்கைப் பயணத்தை தொடர்வதற்கு உதவிபுரிகின்றன எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சேவைகள் இன்னும் வளரவேண்டும்.

கற்பகதருபோல கணக்கற்ற பல சேவைகளை நம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள் மகளிருக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே ஆற்றி, அவர்களை ஓரணியில் நின்று செயற்படவைக்கின்றது.

கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கமைய எமது மகளிர்குழு உறுப்பினர்களும், "கூட்டுறவே நாட்டுயர்வு", "ஒற்றுமையே பலம்", "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு", "ஐக்கியமாய் வாழ்தல்" என தமக்குத் தெரிந்த அரிய பல விடயங்களை மற்றைய மகளிருக்கும் எடுத்துரைத்து, கைப்பணிப் பொருட்கள் எப்படித் தயாரிப்பது எனத் தெரியப்படுத்தி, அதனால் தாம் பெறும் நன்மைகள், படிகள், உணர்வுகள் எனப் பல ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்கள் இப்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களினால் பயன்பெற்ற எமது மகளிர் குழு உறுப்பினர்கள்.

மேலும் நானும் ஓர் மகளிர் குழு உறுப்பினராக இருப்பதில் பெருமைப்பட்டுக்கொள்கின்றேன். ஏனெனில், வளர்ந்தது, வளர்த்தது, வளர்த்தெடுக்கப்பட்டது எல்லாமே இப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனத்தினால்தான். எனது கல்விப் பயணத்திற்கு, கவி உலகுக்குள் பிரவேசிக்க உந்துசக்தியாக இருந்தது எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனம் என்று சொல்லிக் கொள்வதில் உளமகிழ்கிறேன்.

மேலும் நான் க.பொ.த.(உ.த) பரீட்சை எழுதிவிட்டு இருந்தபோது, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனத்தினால் பல்கலைக்கழகத்தில் ஒரு சான்றிதழ் பயிற்சி நெறி தொடங்கப்பட்டது. அதில் என்னை இணைத்து என் கல்விப் பயணத்தை தொடரச் செய்தார்கள். இதைவிட உயர்தரம் சித்தியடைந்து உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் பட்டப்படிப்பை மேற்கொண்ட போது பாராட்டும் ஊக்குவிப்பும் தந்து உதவினார்கள். பின்பு பட்டம் பெறச் செல்வதற்கு பண அவதியுற்ற வேளை தோளோடு தோள் நின்று ஒரு தொகைப் பணம் கடனாக வழங்கியுதவி எனது பட்டமளிப்பு விழாவில் நான் சிறப்பாக கலந்துகொள்வதற்கு வழிசமைத்துத் தந்தார்கள்.

மேலும் கவிதை என்றால் என்னவென்றே தெரியாதிருந்த என்னை கவி எழுத ஆக்கம் தந்ததோடு களமும் தந்து வளர்த்துக் கொண்டிருக்கிறது "கற்பகம்" மாத இதழ்.

மொத்தத்தில் எம் மகளிர் விழிப்புணர்வுபெற, பொருளாதாரத்தில் மேம்பாடடைய, சுயதொழில் அபிவிருத்தியில் வளர்த்தெடுக்க, கல்வி அறிவூட்ட, கூட்டுறவுப் பயிற்சி தொடர என்றென்றும் எம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனம் அளப்பரிய பணியை மகளிருக்கு செய்து வருகின்றது.

வாழ்க வளர்க என்றென்றும்!

"பனைவளம் பெருக்கி, பொருள் வளம் காண்போம்" என மகளிராகிய நாம் உறுதி எடுத்துக்கொள்வோம்.

---

## பருத்தித்துறை..... 1ம் பக்கத் தொடர்ச்சி

திரு செ.ரமணன், திரு. சு.பாரதிதாசன், திரு வை.உதயகுமார், திரு செ.சிவசங்கர் ஆகிய 5 அங்கத்தவர்களும், உயர்கல்வி வாய்ப்பைப் பெற்ற செல்வி தாரணி இளங்கோவன், செல்வி மேரி ஜஸ்மினா இலங்கநாதன் ஆகியோர் விருந்தினர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## வெல்லத்........ 1ம் பக்கத் தொடர்ச்சி

குடும்பப் பெண்கள் மற்றும் இளம் பெண்களின் வாழ்வாதாரத்திகைன நோக்காகக் கொண்டு இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது சுமார் 19 இலட்சம் ரூபா நிதியினை பங்களிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சாலை மூலம் சுமார் 200 அங்கத்தவர்கள் நேரடியாகப் பயன்பெறவுள்ளதோடு, இத்திட்டத்தின்மூலம் 50ற்கு மேற்பட்ட பெண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சாலை அடுத்த மாதம் 15ம் திகதியளவில் தொழிற்பட ஆரம்பித்ததும் யாழ்.மாவட்டத்தில் பனை வெல்லத்துக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் உற்பத்திகளை இலங்கை முழுவதும் சந்தைப்படுத்துவதற்கான சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கான எஸ்.எஸ்.எஸ். தர நிர்ணய சான்றிதழ் பெறுவதற்கான முயற்சிகளிலும் சங்கம் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

## பனை தென்னை.. 3ம் பக்கத் தொடர்ச்சி

பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் குறைவாகக் காணப்படுவதால், இவர்கள் வேறு தொழிலை நாடிச் செல்கிறார்கள். எனவே எதிர்காலத்தில், உற்பத்தி வருவாயை அதிகரித்து, இவர்களுக்கு கூடுதலான சம்பளத்தை வழங்கி நல்லதோர் நிலையை அடைய வேண்டும்.

## தவறுக்காக வருந்துகின்றோம்!

கடந்த மாத அதாவது ஜனவரி 2013 இதழில் ஆசிரியர் கண்ணோட்டப் பகுதியான கற்பகக்கரு பகுதியில் **கற்பகக்கரு** என அச்சாகவேண்டியது தவறுதலாக பிழையாக அச்சிடப்பட்டு விட்டது. இதற்காக மனம் வருந்துகின்றோம்.

## புதிய இயக்குனர் சபை தெரிவு

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் சங்கத்தின் உபதலைவர் திரு ந.ஸ்ரீசங்கர் அவர்கள் தலைமையில் கடந்த மாதம் 28ம் திகதி நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களும் மற்றும் விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், வேலணை பிரதேச சபைத் தலைவர், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு இ.பாலச்சந்திரன், சமாசத் தலைவர் திரு நா.கணேசன், சமாச பொதுமுகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பொதுக்கூட்டத்தில் புதிய இயக்குனர் சபை தெரிவுசெய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு,

தலைவராக திரு கு.நாகேஸ்வரன், உபதலைவராக திரு பொ.பூபாலசிங்கம், செயலாளராக திரு சூ.யேசுதாஸ், நிர்வாக உறுப்பினர்களாக திரு வீ.சிவராசா, திரு நா.குணபாலசிங்கம், திரு சி.ரதீஸ்தீபன், திரு மோ.நாகேஸ்வரன், திரு ஜோ.ஜொமிர்சன், மற்றும் மகளிர்குழு நிர்வாக உறுப்பினராக திருமதி சி.வசந்தலாதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# சமாசத்தின் விசேட பொதுச்சபைக்கூட்டம்

சமாசத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் இம்மாதம் 9ம் திகதி நடைபெற்றது.

சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அ.உ.ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கூ.அ.அலுவலர் திரு இ.பாலசந்திரன், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராசா, மற்றும் சமாச பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் பொதுச்சபைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

01. சமாசத்தின் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள சமாசப் பதிப்பகம் புனரமைக்கப்படவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

02. சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் விபத்து ஓய்வுநலத் திட்டத்துக்கு அங்கத்தவர்களிடமிருந்து 2வீதமும் சங்கம் 1 வீதமுமாக பங்களிப்பு வழங்க வேண்டும் என சென்ற வருட பொதுக்கூட்டத் தீர்மானம் திருத்தம் செய்யப்பட்டது.

03. அங்கத்தவர், பணியாளர் சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறை விதி பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது.

பாடசாலை உபகரணம் வழங்கும் திட்டம்: நிதிவருடத்தில் தொழிற்பட்ட அங்கத்தவர்கள், பணியாற்றிய பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வருடாந்தம் வழங்கி கல்வியினை ஊக்குவிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் விருந்தினர்கள் சிறப்புரை ஆற்றினர்.

## மரணக்கொடைத் திட்டம்!

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 2012ம் ஆண்டு தொடக்கம் மரணக்கொடைத் திட்டம் ஒன்றினை சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் நலன் கருதி நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின்மூலம் அங்கத்தவர்கள், பணியாளர்கள், அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் மரணமடைந்தால் மரணக்கொடை நிதியாக அன்றைய தினமே ரூபா 15 ஆயிரம் வழங்கப்படுகின்றது. இதற்கென தனியான நடைமுறைவிதி தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உபசபையும் உருவாக்கப்பட்டு அவர்களது தீர்மானத்துக்கு அமைய இத்திட்டம் சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்மூலம் இது வரையில் 4 உறுப்பினர்கள் நிதியினைப் பெற்றுள்ளார்கள் என சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் திரு சு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.






இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.